**Dated : 23.10.2024**

**O.S.No. 11/2023**

**PW. 1 - திரு. சக்திவேல், த/பெ. சரவணன்**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

இவ்வழக்கில் இறந்து போன நபர் யார் என்றால் என் தாயார். மேற்படி வழக்கு சம்பவத்தில் என் தங்கை மகன் கவினுக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். அவரை காப்பாற்ற முயன்ற போது தான் என் அம்மா மின்சாரம் தாக்கி இறந்தார் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி தீர்த்தகிரியை தெரியுமா என்றால் தெரியும், எங்கள் ஊர்காரர். 5ம் பிரதிவாதியை பெயருக்காக இவ்வழக்கில் சேர்த்திருக்கிறோம் என்றும், அவர் மீது எந்த தவறும் இல்லை என்றால் சரியல்ல, அவரது தோட்டத்தில் தான் சம்பவம் நடைபெற்றுள்ளது. தீர்த்தகிரி அவரிடத்திற்கு வந்து துணி துவைத்துக்கொள்ள அழைத்திருக்கவில்லை என்றால் சரிதான், என் அம்மாவே சென்றார் என்றால் சரிதான். தீர்த்தகிரி அனுமதிக்கமாட்டார் என்பதாலேயே அவர் வருவதற்குள் காலை 8.00 மணியளவில் என் அம்மா அவர் இடத்திற்கு துணி துவைக்க சென்றுள்ளார் என்றால் சரிதான். மின்சார கம்பி அறுந்திருப்பது குறித்து மின்சார வாரியத்திற்கு போன் மூலம் தீர்த்தகிரி தெரிவித்திருந்தார் என்றால் சரிதான். அவ்வாறு என்று போன் மூலம் புகார் செய்திருந்தார் என்றால் 04.10.2022 அன்று புகார் கொடுத்திருந்தார். அப்போதும் மின்சார வாரியத்தினர் பழுது பார்க்கவில்லை என்றால் சரிதான், மின் விநியோகத்தை துண்டிக்கவில்லை. 5ம் பிரதிவாதி தீர்த்தகிரி முறையாக உரிய நேரத்தில் மின்சார வாரியத்திற்கு மின்சார கம்பி அறுந்திருப்பது குறித்து தகவல் தெரிவித்துவிட்டார் என்பதால் அவருக்கும் இந்த விபத்து சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சாட்சி கூடுதலாக அவர் தோட்டத்திற்கு வரவேண்டாம் என்று சொல்லியிருந்தால் தன் அம்மா சென்றிருக்கமாட்டார் என்று தெரிவித்தார். நீதிமன்றம் குறிப்பாக கேட்ட போது 5ம் பிரதிவாதி தங்களுக்கு உறவினர் இல்லை என்றார். 5ம் பிரதிவாதி எங்களுக்கு இழப்பீடு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எங்களுக்கு இழப்பீடு

கொடுக்கப்பட வேண்டும் என்றால் 1 முதல் 4 பிரதிவாதிகளே பொறுப்புடையவர்கள் என்றால் 1 முதல் 5 பிரதிவாதிகளும் இழப்பீடு கொடுக்க பொறுப்புடையவர்கள். விபத்திற்கு 1 முதல் 4 பிரதிவாதிகளின் கவனக்குறைவும், மெத்தன போக்கும் காரணம் என்பதால் அவர்கள் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி மின்சார வாரியத்திற்கு தகவல் கொடுத்தார் என்ற விவரம் பற்றி வழக்குரையில் நாங்கள் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி தகவலை மறைத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், 5ம் பிரதிவாதியை பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- M. Sumathi Sai Priya,
Principal District Judge,
Krishnagiri.